அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்: 33 /2017
தேதி: 09.03.2017

**ஆந்திராவில் கொடூர செயல், தமிழர்களுக்கு மீண்டும் தொடரும் அவலங்களுக்கு**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் கண்டனம்.**

ஆந்திராவில் கடப்பா மாவட்டத்தில் உள்ள வனப்பகுதியில் செம்மரம் வெட்டி கடத்தியதாக 150-க்கும் மேற்பட்ட தமிழர்கள் அனைவரையும் மனித உரிமைகளுக்கு அப்பாற்பட்டு மிக கொடூரமான முறையில் கைது செய்யப்பட்டிருப்பது மோசமான செயலாகும். இச்செயலை வன்மையாக கண்டிக்கிறேன்.

அடிமாடுகளை கொண்டுசெல்வதுபோல், ஒரே வாகனத்தில் 150-க்கும் மேற்பட்ட தமிழர்களை அடைத்து, மூச்சு விடமுடியாத அளவிற்கு அழைத்து செல்லப்பட்டனர். அவர்களை அரைநிர்வாணமாக அடைத்துவைத்து கொடூர தாக்குதலையும் நடத்தியுள்ளார்கள்.

கைது செய்தவர்களையும் அழைத்து செல்வதற்கு ஒரு வழிமுறை இருக்கிறது. அவற்றை பின்பற்றாத ஆந்திர காவல்துறை மீது மனித உரிமைக்கழகம் தகுந்த நடவடிக்கை உடனடியாக எடுக்கவேண்டும்.

தமிழக அரசு கைது செய்யப்பட்ட தமிழர்களை உடனடியாக மீட்க வேண்டும். மேலும் தமிழர்களுக்கு தொடர்ந்து ஏற்படும் அவலங்களுக்கு மத்திய, மாநில அரசுகள் தக்க நடவடிக்கை கூறவேண்டும்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்